### அரசுக் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் தேர்வு முடிவுகளில் குளறுபடியா? முறைகேடா?

# தேர்வு முடிவுகள் ரத்து செய்யப்பட்டு, உரிய முறையான விசாரணைக்கு அரசு ஆணையிட வேண்டும்!

## திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜுன் 30-

அரசுக் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் தேர்வு முடிவுகளில் குளறுபடியா? முறைகேடா? தேர்வு முடிவுகள் ரத்து செய்யப்பட்டு, உரிய முறையான விசாரணைக்கு அரசு ஆணையிட வேண்டும் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

அரசுக் கல்லூரி உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கான தேர்வு முடிவுகளில் முறைகேடு நடந்திருப்பதாக வந்திருக்கும் செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

**ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது!**

அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில், பேராசிரியர்கள் நியமனம் செய்யப்படாமல், பகுதி நேர விரிவுரையாளர்களைக் கொண்டு தொடர்ந்து நடத்தப்பட்டு வந்ததை தி.மு.க. ஆட்சி சரி செய்யும், நிரந்தரப் பேராசிரியர்களை நியமிக்கும் என்ற தேர்தல் வாக்குறுதிக்கேற்ப, கடந்த தி.மு.க. ஆட்சியில் அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் காலியாக இருந்த 2,708 உதவிப் பேராசிரியர் பணியிடங்களை எழுத்துத் தேர்வு மூலம் நிரப்புவதற்கு ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) அறிவிப்பு வெளியிட்டிருந்தது.

அதன்படி, 2025 டிசம்பர் 27 அன்று எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. 48 பாடங்களுக்கு நடந்த அத் தேர்வுகளை 42,064 பேர் எழுதியுள்ளனர். சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் கொள்குறி வகை கேள்விகளுக்கு 150 மதிப்பெண்களும், பகுதி-2 இல் விரித்துக் கட்டுரையாக எழுதவேண்டியவற்றுக்கு 50 மதிப்பெண்களும், பணி அனுபவத்திற்கு 15 மதிப்பெண்களும், நேர்காணலுக்கு 15 மதிப்பெண்களும் என ஒதுக்கப்பட்டுள்ளது. தி.மு.க. ஆட்சியில் நடந்த இத் தேர்வுகளின் முடிவுகளைப் ‘போர்க்கால அடிப்படையில்’ வெளியிடுவோம் என்று நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில் ஆளுநர் உரையில் த.வெ.க. அரசால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி எழுத்துத் தேர்வு முடிவுகள் இம்மாதம் (ஜுன்) 26ஆம் தேதியன்று முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. ஆனால், தேர்வு முடிவுகள் பெரும் அதிர்ச்சியையும், முறைகேடுகள் நடந்ததற்கான சந்தேகத்தையும் எழுப்புகின்றன.



கொள்குறி வகை வினா (MCQ)க்களில் 100க்கும் மேற்பட்ட மதிப்பெண்கள் பெற்ற பலருக்கு, விரிவான கட்டுரை வடிவ பதில்களை எழுதும் பகுதியில் ‘0’ (சுழியம் ZERO) மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொள்குறி வகை வினாக்களில் குறைந்த மதிப்பெண் பெற்ற பலர், விரிந்த வகை விடைகளில் 50க்கு 49 வரை பெற்றுள்ளனர் என்பது மிக வெளிப்படையாக முறைகேடுகள் நடந்திருப்பதற்கான அறிகுறி!

அதே நேரம் பகுதி 2இல் (விரிவான விடைகள்) ‘0’ (சுழியம்) மதிப்பெண்கள் பெற்றிருப்போரையும் தகுதி பெற்றவர்கள் (QUALIFIED) என்று பட்டியல் சொல்கிறது.

**பல ஆண்டுகாலமாகக் காத்திருக்கும் இளைஞர்களின் கனவு நசுக்கப்பட்டுள்ளது!**

பேராசிரியர் பணியிடங்களுக்குள்ள தகுதித் தேர்வுகளான நெட் தேர்வு, செட் தேர்வு எழுதித் தகுதி படைத்தவர்கள், முனைவர் பட்டம் முடித்தவர்கள் என்று பல ஆண்டுகாலமாகக் காத்திருக்கும் இளைஞர்களின் கனவு நசுக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக நடத்தப்படாமல் இருந்த தேர்வுகளைக் கடந்த தி.மு.க. அரசு நடத்தியது. ஆனால், அதன் முடிவுகள் வெளியிடப்படும் போது ஆட்சி மாறிவிட்டது. இதில் நடந்திருக்கும் குளறுபடி என்ன? முறைகேடுகள் என்ன?

பகுதி2 இல் திராவிட இயக்கத்தின் சாதனைகளைப் பற்றிய கேள்விகளை எழுதிய பலருக்கு 0 (சுழியம்) மதிப்பெண் வழங்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டு எழுகிறதே! எப்போது, யாரால் விடைத்தாள்கள் திருத்தப்பட்டன? ஏன் அவசர அவசரமாக வெளியிடுகிறோம் என்ற பெயரில், தவறான, முறைகேடான முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த அதிமுக ஆட்சியில் 2017இல் நடந்த பாலிடெக்னிக் விரிவுரையாளர் தேர்வுகளிலும் இதே போன்ற மோசடிகள் நடந்ததாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அந்த வழக்கு தீவிரமாக விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் அதே போன்ற சூழல் இப்போது கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் உதவிப் பேராசிரியர் பணியிடத் தேர்வுகளிலும் நடந்திருப்பது, இது தொடர் கதையா என்னும் கேள்வியை எழுப்புகிறது.

**தமிழ்நாடு அரசின் உடனடியான நடவடிக்கையை நாடு எதிர்பார்க்கிறது!**

முதலில், நடந்துள்ள பிரச்சினைக்கு அரசு பொறுப்பேற்க வேண்டும். அடுத்து, இத் தேர்வு மதிப்பீடு ரத்து செய்யப்பட வேண்டும். தேவையானால், தேர்வே ரத்து செய்யப்பட வேண்டும். முறையான சிறப்பு விசாரணைக்கு ஆணையிடப்பட வேண்டும். கல்வி வளர்ச்சியின் வெற்றி, முறையானவர்களுக்கான வேலைவாய்ப்பிலும் இருக்கிறது. அதனைப் பறித்து, அவர்களின் நம்பிக்கையைத் தகர்க்கக் கூடாது. இந்தப் பணியில் ஈடுபட்டோர், தேர்வுத்தாள் திருத்தத்தில் ஒரு சார்பான நடவடிக்கைகள் எடுத்தோர், தவறிழைத்தோர் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டும். குற்றமிழைத்தவர்கள் யாராயினும் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு அரசின் உடனடியான நடவடிக்கையை நாடு எதிர்பார்க்கிறது.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# மைனா...




கல்விக்கூடத்தில்
“கை படாத
சீ.டி.”க்கு

குத்தாட்டம்
போட்டவர்
கல்வி அமைச்சர்..

மக்கள் திரள்
அரங்கத்தில்

மாத்திரையை (?)
பொடி செய்த
மாமனிதர்

மனிதவள
மேம்பாட்டுத்துறை
அமைச்சர்...

புகை பிடிக்கும்
படத்தை
பச்சை குத்திக்
கொண்டவர்

மகளிர்
மேம்பாட்டுத்
துறை அமைச்சர்...

தமிழ் பேசத்
தெரியாத
தயாரிப்பாளர்

தமிழ்நாட்டின்
டெல்லி
தொடர்பாளர் .

ரூட்
“மாஃபியா”வின்
ஜெகதாள பிரதாபன்
முதல்வருக்கு
தனிச் செயலாளர்...

சபாஷ்...

உன்
நியமனங்களே
உன் நிர்வாகத்
திறமைக்கு
சாட்சி என்றால்..

உன் விரலில்
இருக்கும்
பச்சை மை
பேனா..

எஞ்சிய காலத்தில்
இன்னும்
என்னென்ன

கொடு”மை:க்கு
கெடு “மை”
ஆகுமோ..

**என்னநாஞ்
சொல்றது**

**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*



### தளபதி முருகேசன் — செந்தலை ந.கவுதமன் பங்கேற்பு!

# சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில் ஐம்பெரும் விழா!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. உரை!

கோவை, ஜுன் 30 -

கோவை மாவட்டம், சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில் முத்த மிழறிஞர் கலைஞர் 103 ஆம் பிறந்த நாள், பெரியாரியல் அறிஞர், தோழர் வே.ஆனைமுத்து 102 ஆம் பிறந்தநாள், அண்ணல் அம்பேத்கர் 136 ஆம் பிறந்தநாள், பாவேந்தர் பாரதிதாசன் 136 ஆம் பிறந்த நாள், “பேச வைத்த பெரியார்” நூல் மறு பதிப்பு வெளியீட்டு விழா ஆகிய ஐம்பெரும் விழா 2.7.2026 வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் எஸ்.ஆர்.எஸ். திருமண மண்டபம் கலங்கல் பாதை, சூலூரில் நடைபெறுகிறது.

விழாவிற்கு சூலூர் பாவேந்தர் பேரவை செயலாளர் நா.வரதராசு வரவேற்புரை ஆற்றுகிறார்.

சூலூர் பாவேந்தர் பேரவைத் தலைவர் வெ.க.சண்முகவேல் தலைமை வகிக்கிறார்.

சூலூர் பாவேந்தர் பேரவை துணைத் தலைவர் க.தேவராசு, கோவை மைத் கிரியேட்டர்ஸ் யோகராசன், திருமதி மைதிலி யோகராசு ஆகியோர் சிறப்பிக்கப்படுகின்றனர்.

கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், சூலூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் த.மன்னவன், சூலூர் சிறப்பு நிலை பேரூராட்சி தலைவர் தேவி மன்னவன், கோவை சூ.செ.குமரவேல் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

தி.மு. கழக கல்வியாளர் அணி மாநிலத் தலைவர், நூலாசிரியர் புலவர் செந்தலை ந.கௌதமன் விழா நோக்கவுரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா கலந்து கொண்டு “சாதனைத் தலைவர்கள் நினைவு போற்றல்” நூலினை வெளியிட்டு “சூடு மாறாது சூரியனுக்கு” எனும் பொருளில் சிறப்புப் பேருரையாற்றுகிறார்.

இருகூர் ஆ.சந்திரன், சிற்பி செல்வராசு, அ.வெ.அன்பரசு, கொள்ளுப் பாளையம் ராமசாமி, சோலை ப.கணேசு, உரம் சு.கவுதமன், பசுமை நிழல் சூ.ஆ.விசயகுமார் ஆகியோர் நூலின் முதல் படியை பெற்றுக் கொள்கின்றனர்.

நிறைவாக சூலூர் பாவேந்தர் பேரவைப் பொருளாளர் ச.அங்கமுத்து நன்றி கூறுகிறார்.

### மொழிப்போர்த் தியாகி – முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர்

# இரா.தென்னவன் துணைவியார் பங்கையர்செல்வி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

திருவாரூர், ஜுன்-30.

மன்னார்குடி முன்னாள் ஒன்றிய பெருந்தலைவரும், மொழிப்போராட்ட தியாகியுமான இரா.தென்னவன் அவர்களின் துணைவியார் திருமதி. பங்கையர் செல்வி அவர்கள் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த திருமதி.பங்கையர்செல்வி மன்னார்குடி மத்திய ஒன்றிய செயலாளர் சித்தேரி சிவா அவர்களின் மூத்த சகோதரியும் , தலைமை பொதுக்குழு உறுப்பினர் இரா. காஞ்சி துரை அவர்களின் தாயாருமாவார் .



அம்மையாரின் மறைவின் தகவல் அறிந்த கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் தங்கள் இரங்கலை தெரிவித்துள்ளனர். கழக நிர்வாகிகளும், கழக தோழர்களும் அம்மையாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த திருமதி. பங்கையர் செல்வி அவர்களின் இறுதி ஊர்வலம் 30.06.2026 புதன் நண்பகல் 2.00 மணிக்கு அம்மையாரின் இல்லத்தில் இருந்து புறப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டம்பட்டி கா.கந்தசாமி
### ஜுன் 30 (2018)



**கழகம் தொடங்கிய நாள் முதல் உறுப்பினராகி, கழகப் பணியாற்றியவர்.**

**1989–ல் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**மூன்று முறை காட்டம்பட்டி ஊராட்சி தலைவராகவும் – கிணத்துகடவு வட்டார நிலவள வங்கி தலைவராகவும் – கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராகவும் – மாநில கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திண்டிவனத்தில் த.வெ.க. அமைச்சரைக் கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் – 500க்கும் மேற்பட்ட தி.மு.க.வினர் கைது!

திண்டிவனம், ஜீன் 30-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் திண்டிவனத்தில் த.வெ.க. அமைச்சரைக் கண்டித்து நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தி.மு.க. வினரை போலீசார் கைது செய்தனர்.

பொதுவெளியில் த.வெ.க. அரசின் அமைச்சர் சரத்குமார் போதைப்பொருள் பயன்படுத்தியது தொடர்பான வீடியோ வெளியானதையும், இளைஞர்களை தவறான வழிக்கு எடுத்துச் செல்லும் அமைச்சர் சரத்குமார் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் திண்டிவனம் வ.உ.சி. திடலில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா, துணை அமைப்பாளர்கள் சுபாஷ் சந்திர போஸ், ஞானசேகரன், லோகநாதன், மதியழகன், பிரதிவ், பெனாசிர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி கண்டன ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் சரத்குமாரை கண்டித்து கோஷமிட்டார்.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அமைச்சர் சரத்குமாரை உடனடியாக பதவியில் இருந்து நீக்க வேண்டும் என வலியுறுத்தி கண்டன கோஷமிட்டனர்.

மேலும் ஆர்ப்பாட்டத்திற்கு போலீசார் அனுமதி தராததால் திண்டிவனம் டி.எஸ்.பி.பிரகாஷ் தலைமையிலான நூற்றுக்கு மேற்பட்ட போலீசார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் உள்ளிட்ட 500க்கும் மேற்பட்ட தி.மு.க. வினரை கைது செய்து திண்டிவனத்தில் உள்ள தனியார் மண்டபத்துக்கு கொண்டு சென்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனிராஜ், பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, ஒன்றியச் செயலாளர்கள், சொக்கலிங்கம், ராஜா ராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், அண்ணாதுரை, மொடையூர் துரை, மணிமாறன், செழியன், பச்சையப்பன், சாந்தி சுப்பிரமணியன், திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், செஞ்சி நகரச் செயலாளர் கார்த்திக், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் அசோகன், நகர துணைச் செயலாளர் கௌதமன், முன்னாள் நகர துணைச் செயலாளர் அசோக் குமார் உள்ளிட்ட அனைத்து அணி அமைப்பாளர்கள், தி.மு.க. நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். திண்டிவனம் நகர மாணவரணி அமைப்பாளர் தமிழரசன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் க. மகாராசன்
### ஜுன் 30 (2014)



**இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**துறையூர் நகரத்தில் மாவட்ட பிரதிநிதியாகவும், அதன் பின்னர் இருபத்தோறு ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.**

**1986–ல் நகர்மன்றத் தலைவராகவும், 2006–ல் நகர்மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**